**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2018**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் 16 விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகளுக்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டியல்கள் மற்றும் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட நேரொத்த தொகைகளுக்கும் இடையே ரூபா 9,132,850 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் அக் கணக்கு விடயங்களின் சரியான தன்மை கேள்விக்குரியதாக உள்ளது. | நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து பேரேட்டு மீதிகளை ஒப்பீடு செய்து விபரமான பட்டியல்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பேரேடு மற்றும் ஏனைய பட்டியல்களின் மீதிகளை கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்;** பூர்த்தி செய்யப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பூரணத்தன்மை, பௌதீக ரீதியான இருக்கும் தன்மை மற்றும் ரூபா 921,569,395 தொகையான முன்கொண்டுசெல்லும் தொகை மற்றும் ரூபா 341,783,232 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பவற்றின் சரியான | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 7 இன் பிரகாரம் பூரணப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் நிதிக்கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து விபரமான பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்படும். | நிறுவனம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுகின்றதை அதிகாரசபை உறுதிப்படுத்த வேண்டியதுடன் நாளதுவரையாக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுவதற்கு நடவடிக்கை வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயமானது இனங்காணப்படாத மற்றும் இணக்கம் செய்யப்படாத சொத்துக்களின் பெறுமதிகளையும் ரூபா 335,204,308 தொகையான ஆரம்ப மீதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிலவற்றையும் உள்ளடக்கியிருந்தது. | | |
| (ஆ) | **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 9 - இருப்புக்கள்;** ஆண்டின் இறுதியில் பௌதீக ரீதியான இருப்புக் கணக்கெடுப்பை அவதானிப்பதற்கான சாத்தியத் தன்மை காணப்படாததுடன் இருப்பு மீதிகளின் இருக்கும் தன்மை தொடர்பாக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் அல்லது ஏதேனும் தனிப்பட்ட உறுதிப்படுத்தல்கள் காணப்படாததன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 142,251,060 பெறுமதியான இருப்பு தொடர்பாக இருப்பின் கிடைப்பனவுத் தன்மையை சரிபார்ப்பதற்கான திருப்திகரமான மாற்று முறைகளும் காணப்படவில்லை. | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் முறையான சுயாதீனமான பௌதீக மெய்மையாய்வுகளுடன் நுகரத்தகு இருப்புக்களை பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து விபரமான பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு நிதியாண்டும் முடியவடைந்த பின்னர் சுயாதீனமான பௌதீக இருப்பு மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான அட்டுறுச் செலவினங்களின் மீதி ரூபா 16,240,668 தொகையாக காணப்பட்ட போதிலும் அதில் ரூபா 17,876,237 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 03 இன் கீழ் உரிய கணக்குகளில் 2019 ஆம் ஆண்டில் கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | அட்டுறு செலவினத்தை சரியாக இனங்காண்பதற்கும் அதற்கிணங்க அவற்றை கணக்கீடு செய்வத்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,635,569 மேலதிகக் கொடுப்பனவு திரண்ட மிகை/ பற்றாக்குறைக்கு சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டுறு செலவினம் என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | ஒப்பந்ததாரரிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 670,644 தொகையான பெறுமதி சேர் வரி (வற்), வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஒப்பந்ததாரரிற்கான முற்பணக் கணக்கிற்கு தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் மேற்படி தவறை சீர்செய்வதற்காக அதே தொகை ஒப்பந்ததாரரிற்கான முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் இரண்டு கணக்கும் ரூபா 1,341,288 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | உரிய கணக்குகளில் 2019 ஆம் ஆண்டில் கணக்கீட்டுத் தவறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இவ் வகைத் தவறுகளை குறைப்பதற்கு அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் பிரயோகிக்கப்பட வேண்டும். |
| (இ) | நடைமுறையல்லாச் சொத்துக்களின் அகற்றலிலிருந்தான இலாபமாக ரூபா 2,169,034 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உரிய சொத்துக்கள் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வுக் கணக்குகளிற்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே நேரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் விற்பனைகளிலிருந்தான பெறுகைகளாக ரூபா 3,097,246 தொகை காட்டப்பட்டிருந்தது. | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 07 இன் பிரகாரம் அகற்றப்படுகின்ற சொத்துக்களின் கிரயம், திரண்ட பெறுமானத்தேய்வுகள் மற்றும் விற்பனை வருமானம் என்பவற்றை உரிய கணக்குகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அகற்றப்படுகின்ற சொத்துக்களின் விபரமான பட்டியல்கள் நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு செயன்முறையின் சரியான தன்மை மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

ஆகையால் நிலையான சொத்துக்களின் அகற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு செயன்முறைகளின் சரியான தன்மை மற்றும் நம்பகத் தன்மையை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தன.

## 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபை இரண்டு நடைமுறைக் கணக்குகளிற்கான மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை முறையே 2018 யூன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையும் 2018 திசெம்பர் மாதத்திற்காகவும் தயாரிக்காததால் வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் 2018 திசெம்பர் 31 வரை காசுப் புத்தகத்தில் (பொதுப் பேரேடு) காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையே ரூபா 149,379,649 கூட்டுத்தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதனால் ரூபா 276,021,675 தொகையான சீராக்கம் செய்யப்படாத மீதி மற்றும் ரூபா 16,116,434 தொகையான கையிலுள்ள காசு என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவையாக காட்டப்பட்டிருந்தன. ஆகையால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சில பதிவு செய்யப்படாத வருமானம் மற்றும் செலவினம் காணப்படுவதற்கான சாத்தியத்தன்மையை கணக்காய்வின் போது கூறமுடியாதிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 450,649,044 தொகையான காசு மற்றும் காசுக்குச் சமமானவை மற்றும் ரூபா | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் அனைத்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி முகாமைத்துவம் மீதான செயற்திறனான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் மோசடி அல்லது தவறான நடத்தைக்கான இடத்தை தவிர்ப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| 23,261,094 மிகை என்பவற்றின் சரியான தன்மை மற்றும் பூரணத் தன்மையை கணக்காய்வின் போது நம்ப முடியாதிருந்தது. | | |
| (ஆ) ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ளவாறு பொதுப் பேரேடுகளில் காட்டப்பட்ட காசுப் புத்தக மீதிகள் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த காசுப் புத்தக மீதிகளுடன் சமப்பட்டிருக்காதமை அதிகமான சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ரூபா 9,045,270 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத வேறுபாடுகள் அவ் இரண்டு தொகைகளுக்கும் இடையில் அவதானிக்கப்பட்டன. | பேரேடு மற்றும் ஏனைய பட்டியல்களின் திருத்தப்பட்ட மீதிகளை கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பேரேடு மற்றும் ஏனைய பட்டியல்களின் மீதிகளை கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.5.5 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 625,570 தொகை இனங்காணப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்ததுடன் உரிய கணக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையிடல் காலப்பகுதியின் போது இனங்காணப்படாத பெறுவனவுகள் கணக்கு மீதி நிறுவன வருமானமொன்றாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குப் புத்தகங்களிலிருந்து இவ் வகையான சந்தேகத் தன்மையான மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) அனுசரணை மற்றும் நிர்மாண தனிச்சிறப்பு வருமானம் | 4,032,500 | அனுசரணைகளை பெற்றுக்கொள்வதற்காக வெளித் தரப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகைகள் | நிதிக்கூற்றுக்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து உரிய நிகழ்ச்சித்திட்டங்களின் அனைத்து ஆவணச் சான்றுகளையும் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல் மற்றும் தொகையை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொடர்பான கடிதங்களை உள்ளடக்கிய கோப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அவ் வேண்டுகைகள் மீது பெறப்பட்ட உள்ளபடியான தொகை | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்வதற்கு கணக்காய்விற்கு அனைத்து ஆவணச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | "சில்ப சவிய" நிகழ்ச்சித்திட்டம் | 121,734,231 | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பங்குபற்றுநர்களின் பட்டியல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தலைப்புக்கள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் போன்ற பயிற்சி விபரங்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நிர்மாண உபகரண இயந்திரவியல் கற்கைநெறி | 15,951,137 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கடன்பட்டோர் மீதிகள் | 14,876,930 | கடன்பட்டோர் உறுதிப்படுத்தல்கள் | உரிய கடன்பட்டோர்களிற்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைக் கடன்பட்டோர் மீதிகளை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (உ) | கடன்கொடுத்தோர் மீதிகள் | 11,302,490 | உறுதிப்படுத்தல்கள், வயதுப் பகுப்பாய்வு மற்றும் விபரமான | உரிய கடன்கொடுத்தோரிற்கு உறுதிப்படுத்தல் | |

| | | |
|---|---|---|
| | பட்டியல்கள் | கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைக் கடன்கொடுத்தோர் மீதிகளை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

### 1.6.1 பெறவேண்டியவைகள்

-------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7,210,101 தொகையான கடன்பட்டோர்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 6,415,111 05 ஆண்டுகளிற்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன்பட்டோர் மீதிகள் அனைத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சீஐடிஏ கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் அறவிடமுடியாத கடன்பட்டோர் மீதிகள் (100% அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு) சீஐடிஏ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் முகாமைத்துவ சபையிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு பரிந்துரைக்கப்பட்டவாறு கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றப்படும் | இந் நீண்டகால நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது முறையான புலனாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் உரிய அங்கீகாரத்தை பெற்று கணக்குப் புத்தகங்களிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

-------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் ஆண்டிற்கு ஆண்டு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 2,663,659 வெளிநாட்டு உதவி மீதியை 1996 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரிக்கு மீளளிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீஐடிஏ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் முகாமைத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட சீஐடிஏ இன் வருமானமொன்றாக வெளிநாட்டு உதவி மீதியை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது முறையான புலனாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் கணக்குப் புத்தகங்களிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 811,852 மொத்தப் பெறுமதியான விநியோகம், பொது, எரிபொருள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு மாதத்திலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நேரத்தில் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறப்பட்ட காசு முற்பணங்கள் உரிய நோக்கம் பூர்த்தியடைந்ததும் உடனடியாக அவை தீர்ப்பனவு செய்யப்படாமல் அரச பணம் முறையற்றவாறு பயன்படுத்தப்படும் விடயத்தை தீர்ப்பதற்கு சரியான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) செயல்நிமித்தக் கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்ததும் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும் 38 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,853,134 கூட்டுத்தொகையான அக் கட்டுநிதிகள் 31 நாட்கள் தொடக்கம் 141 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. அக் கட்டுநிதிகளில் ரூபா 554,019 தொகை அல்லது ஏறத்தாழ 30 சதவீதம் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் காசு மூலம் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் முற்பணங்களை வழங்குவதற்கு முன்னர் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படாததன் காரணமாக அதன் உத்தியோகத்தர்களால் அரச நிதி முறையற்றவாறு பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகாரசபை வழங்கியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | தேவையான அங்கீகாரங்கள் பெறப்படாமல் அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீடுகளில் ரூபா 150,707,803 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஊழியரிற்கான பணிக்கொடைக் கொடுப்பனவுக் கிரயத்தை எதிர்கொள்வதற்கு நிதி வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடு ஒன்றாக காணப்படவில்லை. | நிதி அதிகாரச்சட்டம் மற்றும் உரிய சுற்றறிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு நிதிப் பிரமாணம் 371 | (i) பதவிநிலைத் தர உத்தியோகத்தரிற்கு மாத்திரமே செயல்நிமித்த உபகட்டுநிதி செலுத்தப்படக் கூடிய போதிலும் இவ் ஏற்பாட்டிற்கு முரணாக 07 சந்தர்ப்பங்களில் 03 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கும் | அதிகார மட்டங்கள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றி பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் முற்பணங்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 08 சந்தர்ப்பங்களில் 07 சாரதிகளிற்கும் முறையே ரூபா 1,095,375 மற்றும் ரூபா 123,000 கூட்டுமொத்தமான அத்தகைய கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| | | (ii) ஒவ்வொரு விடயத்திலும் ஆகக் கூடியது ரூபா 100,000 வரை செயல்நிமித்த உப கட்டுநிதியை கணக்கீட்டு உத்தியோகத்தர் அங்கீகரிக்கலாம். எனினும் ரூபா 3,153,585 கூட்டுமொத்தமான செயல்நிமித்த முற்பணங்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 15 சந்தர்ப்பங்களில் 07 பதவிநிலைத் தர உத்தியோகத்தரிற்கும் 03 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தரிற்கும் வழங்கப்பட்டிருந்தன. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ளவாறு தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 யூன் மாதத்திலிருந்து நடைமுறைக் கணக்கொன்றிற்கான மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை அதிகாரசபை தயாரித்திருக்கவில்லை. | ஒவ்வொரு மற்றும் எல்லா மாதங்களின் இறுதியிலும் மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டலின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கையின் 4.2.5 ஆம் பந்தி | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு மற்றும் மெதுவாக அசையும் மற்றும் பழுதடைந்த இருப்புக்களை இனங்காணும் கூற்றுக்கள் என்பன மாதாந்த அடிப்படையில் சபையால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 23,261,094 மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,044,982 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 13,216,112 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம், கேட்போர் கூடம் மற்றும் செயலமர்வு அறைகளை வாடகைக்கு விடுவதன் வருமானம் மற்றும் கற்கைநெறிக் கட்டணம் என்பன முறையே ரூபா 2,706,723, ரூபா 4,509,484 மற்றும் ரூபா 4,617,732 அதிகரித்தமை மற்றும் ரூபா 9,629,547 தொகையான ஐஎல்ஓ நிகழ்ச்சித்திட்ட பெறுகை மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 2.2 பிரதான வருமானச் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இயந்திரங்கள், கேட்போர் கூடம் மற்றும் செயலமர்வு அறைகளை வாடகைக்கு விடுவதிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 7,959,405 அல்லது 45.68 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 60 மில்லியன் தொகையால் (2017 - ரூபா 90 மில்லியன்) முதலீடுகள் அதிகரித்ததன் விளைவாக முதலீடுகள் மீதான வட்டி வருமானம் 24.53 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ ஓய்வூதிய திட்டத்தின் அடிப்படையில் ஓய்வுபெற்ற ஊழியர்களிற்கான ரூபா 19,767,644 இழப்பீட்டுக் கொடுப்பனவு காரணமாக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 35,342,025 ஆல் பிரதானமாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது ‘‘சில்ப சவிய’’ பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 182,244,511 மூலதன மானியம் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட போதிலும் இக் கணக்கு ரூபா 1,923,383 ஆல் குறைத்து ரூபா 180,321,128 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இவ் வேறுபாட்டிற்கான ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான மேற்பார்வை மற்றும் பாதீட்டுக் கட்டுப்பாட்டின் ஊடாக குறித்த நோக்கத்திற்கு மூலதன மானியங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நோக்கங்களிற்காக பெறப்பட்ட திறைசேரி மானியங்களை பயன்படுத்துவதற்கும் அதற்கிணங்க அவற்றை கணக்கீடு செய்வதற்கும் முகாமைத்துவம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்தல் வேணடும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் மிகையான பொருட்களிற்காக ரூபா 1,383,211 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் கணக்குகளில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டில் மிகையான இருப்பு மீதியை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான புலனாய்வொன்றை நடாத்திய பின்னர் இவ் வகையான கணக்குகளை தீர்வு செய்வதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12, 13 மற்றும் 14 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட அதிகாரசபையின் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக | 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தொழிற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் அதிகாரசபையின் | மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களிற்காக பெறப்பட்ட திறைசேரி மானியங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதன் மூலம் 2014 இன் 33 ஆம் இலக்க |

| | | |
|---|---|---|
| ரூபா 150,707,803 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்படாமல் அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீட்டு மூலங்களில் அத் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான செயற்பாட்டு மிகையில் 47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 11,032,159 தொகையான வட்டி வருமானம் இம் முதலீடுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்தது. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 குறைப்பயன்பாட்டு நிதிகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் 03 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்விற்கு கிடைத்த வங்கிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 212,973,855 தொகையான சராசரிக் காசு அவ் வங்கி நடைமுறைக் கணக்குகளில் நோக்கம் எதற்கும் பயன்படுத்தப்படாமல் ஆண்டு முழுவதும் அவ் வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றிருந்தன. மேலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந் நடைமுறைக் கணக்ககளின் மீதிகள் ரூபா 329,940,433 ஆக காணப்பட்டது. இதன் விளைவாக ஏறத்தாழ ரூபா 21 மில்லியன் தொகை அரசாங்கத்திற்கு நட்டமேற்பட்டிருந்தது. | முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நிதிகளை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபையின் நோக்கங்கனை அடைந்து கொள்வதற்கு வங்கி நடைமுறைக் கணக்குகளிலுள்ள விளைவற்ற வங்கி மற்றும் காசு மீதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| Hydraulic Training Kit கொள்வனவிற்காக 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 4,127,769 தொகையான மூலதன மானியம் பெறப்பட்டிருந்த போதிலும் அது 2019 ஆகஸ்ட் 31 வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் சீஜடிஏ இற்காக Hydraulic Training Kit ஒன்றை கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டிக் கேள்வியை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் தனி முகவரே கூறுவிலையை சமர்ப்பித்திருந்த போதிலும் அக் கூறுவிலை குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருக்காததால் சீஜடிஏ இன் முகாமைத்துவம் இந் நிதிகளை பயன்படுத்தி CETRAC இற்காக ஆய்வுகூடக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தியிருந்தது. | மேலும் தாமதமின்றி உரிய நோக்கங்களிற்காக நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 390 ஆக காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 278 ஆக காணப்பட்டதனால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 112 ஆகும். எனினும் கால அடிப்படையிலான மீளாய்வுகள் மூலம் பின்பற்றப்படுகின்ற உண்மையான பதவியணி மட்டங்களை அதிகாரசபை மதிப்பிட்டிருக்கவில்லை. | கால அடிப்படையிலான மீளாய்வுகள் மூலம் பின்பற்றப்படுகின்ற குறித்த சில உண்மையான பதவியணி மட்டங்கள் வழமையாக காணப்படுகின்றது. மேலும் 2019 ஆண்டில் அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கால அடிப்படையிலான மீளாய்வுகள் மூலம் பின்பற்றப்படுகின்ற உண்மையான பதவியணி மட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் அதிகாரசபைக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தெரிவு செய்யப்பட்ட வளைகுடா கூட்டிணைப்பு சபையில் (Gulf Cooperation Council) (ஜீசீசீ) இலங்கை தொழிலாளர்களின் முன்னேற்றப்பட்ட திறன்களை இனங்காணுதல் மற்றும் குறைக்கப்பட்ட பாதிப்புக்களினை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 10,169,300 தொகையை விஞ்சாத மானியமொன்றை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,629,548 தொகையை அதிகாரசபை பெற்றிருந்தது. எனினும் அதில் ரூபா 3,151,369 தொகை மாத்திரம் இந் நோக்கத்திற்காக மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்ததுடன் அதிகாரசபை 2019 மே 15 வரையிலும் குறித்த நோக்கத்திற்காக ரூபா 6,478,179 ஆன மிகுதி தொகையை பயன்படுத்தியிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் வழங்கப்பட்ட 2014 யூன் 26 ஆம் திகதிய எம்ஒஎவ்பி/ஈஆர்டி/2014/1 ஆம் இலக்க சுற்றிக்கையுடன் அதிகாரசபை இணங்கியிருக்கவில்லை. | வரவிருக்கும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் வழங்கப்பட்ட 2014 யூன் 26 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2014/1 ஆம் இலக்க சுற்றிக்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சர்வதேச நிறுவனங்களுடன் ஏதாவது மானிய அல்லது கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>இது தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் வழங்கப்பட்ட 2014 யூன் 26 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2014/1 ஆம் இலக்க சுற்றறிக்கையை தயவு செய்து பார்க்கவும். |

## 3.6 வாகன தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது 12 வாகனங்கள் 18 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் அவ் வாகனங்களை திருத்துவதற்காக ரூபா 624,259 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் சீஜடிஏ நாளதுவரையாக்கப்பட்ட விபத்துப் பதிவேட்டை | காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்புக்களை |

| | | |
|---|---|---|
| எனினும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்புக்களை தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் அதிகாரசபையால் பேணப்பட்ட வாகன விபத்துப் பதிவேட்டின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது 23 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தன என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அவ் வாகனங்களின் திருத்தத்திற்காக ஏற்பட்ட தொகை பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | பேணியிருந்தது. | தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 வெளிப்படையான மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------------------

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 மே 28 ஆம் திகதிய சீ1 18050175 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டிற்கு இணைக்கப்பட்ட விலைப்பட்டியலிற்கு சில மாற்றங்கள் (திகதி, தொகை மற்றும் விபரம் என்பவற்றினை மாற்றம் செய்தல் போன்றன) செய்யப்பட்ட பின்னர் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரால் ரூபா 65,000 தொகை பெறப்பட்டிருந்தது. | மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் விசாரணைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இவ் வகையான மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கலை ஒழிப்பதற்கு முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன் இக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட உத்தியோகத்தரிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|

---------------------------------- ------------------------------------------ --------------

அதிகாரசபையின் செயற்திறனானதும் சீரானதுமான செயற்பாடுகளிற்காக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகளை அதிகாரசபை ஆற்றியிருக்கவில்லை.

| **அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கான தொடர்பு** | **இலக்கிடப்பட்ட செயற்பாடு** | | |
|---|---|---|---|
| 7(1) ஆம் பிரிவு | ஆகக்குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது ஒரு தேசிய ஆலோசனை சபை கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2019.02.12 இலும் 2019.06.24 இலும் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இன்னொரு கூட்டம் விரைவில் கூட்டப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| 13(ஓ), (க) மற்றும் (கு) பிரிவு | இவ் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரசபையால் ஆற்றப்பட வேண்டிய தொழிற்பாடுகள் ஆற்றப்பட்டிருக்கவில்லை. | 13(ஓ) ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்தல் - இத் தொழிற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படும்.<br><br>13(க) நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் நிர்மாணக் கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களின் விபரப் புத்தகம் (Directory) - இத் தொழிற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படும். விதி விரைவில் பிரசுரிக்கப்படும்.<br><br>13(கு) பாரமான நிர்மாண இயந்திரங்களின் விபரப் புத்தகம் - இத் தொழிற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படும். விதி விரைவில் பிரசுரிக்கப்படும். | நாட்டில் நிர்மாணக் கைத்தொழிலின் சீரான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக்காக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை ஆற்றுவதற்கு உடனடியாக செயற்திறனான பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 19(1) ஆம் பிரிவு | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிக்கத் தவறியமை. | அனைத்து நிதிகளும் திரட்டிய நிதியத்தின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும் என | |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சரவை தீர்மானித்ததன் காரணமாக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் இன்னமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் திரட்டிய நிதியத்தின் ஊடாக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி விதிப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டுமென 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியுள்ளன. அமைச்சரவையால் அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு சட்ட வரைஞரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. திருத்திய அதிகாரச்சட்டம் ஏற்படுத்தப்பட்டதும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு விதி பிரசுரிக்கப்படும். | நாட்டில் நிர்மாணக் கைத்தொழிலின் சீரான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக்காக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை ஆற்றுவதற்கு உடனடியாக செயற்திறனான பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 41 ஆம் பிரிவு | ஆதன அபிவிருத்தியாளர்கள் பதிவேடொன்றை பேணுதல். | ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்தல் - இத் தொழிற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படும். | |
| 43 ஆம் பிரிவு | நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் நிர்மாணக் கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களின் விபரப் புத்தகமொன்றை (Directory) பேணுதல். | நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் நிர்மாணக் கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களின் விபரப் புத்தகம் (Directory) - இத் தொழிற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படும். விதி விரைவில் பிரசுரிக்கப்படும். | |

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒழுங்கான அடிப்படையில் பௌதீக மெய்மையாய்வை மேற்கொள்ளுதல், நட்டக்கழிவுகள் ஏதாவது இருந்தால் இனங்காணுதல் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் போன்றவற்றினை மீள அடையாளப்படுத்துதல் போன்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான முழுமையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று வடிவமைக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கையை பட்டியல்படுத்துதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய வருடாந்த அறிக்கைகளை அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது பாராளுமன்றத்தில் விரைவில் பட்டியல்படுத்தப்படும். | மேலும் தாமதமின்றி அவ் அறிக்கைகளை பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 78 விடயங்கள் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளிற்கிடையே 25 சதவீதம் தொடக்கம் 1,634 சதவீதம் வரையிலான வீச்சில் முக்கியத்துவமான முரண்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முரண்களை குறைத்து வருடாந்த பாதீட்டை உண்மையானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பாதீட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |